**வரகாபொல பிரதேச சபை - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரகாபொல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் வரகாபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகார சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகார சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மீள் செலுத்தப்பட்ட ரூபா 1,279,645 ஆன கடன் தவணை தொகையை தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செம்மையாக்குவதற்கு பதிலாக மூலதன செலவாக கணக்கீடு செய்ததன் காரணமாக ஆண்டின் மிகை அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | மீள் செலுத்தப்பட்ட தொகையை தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செம்மையாக்கி சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் தவணை செலுத்துதளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | நடைமுறையல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்ய செலவிடப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 967,649 மீண்டுவரும் செலவாக கணக்கீடு செய்தமையால் ஆண்டின் செயற்பாட்டு மிகை அப்பெறுமதியினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மூலதன மற்றும் மீண்டுவரும் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 2020 திசெம்பர் 31 திகதி ஆயுர்வேத மருந்துகளின் இருப்பு ரூபா 922,478 ஆன போதும் அவை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | 2021 இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டு இறுதியில் காணப்படும் சொத்துக்களை விடுபடாது கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | எதிர்வரும் ஆண்டிற்காக கிடைத்த கூட்டுத்தொகை ரூபா 421,038 ஆன வீதவரி மற்றும் ஏக்கர் வரி மீளாய்வாண்டு வருமானமாக கணக்கீடு செய்துள்ளமையால் ஆண்டின் செயற்பாட்டு மிகை அப்பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | 2021 இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கு உரிய வருமானம் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 05 செலவு விடயங்களிற்குரிய மீண்டுவரும் செலவு ரூபா 405,809 தொகை மூலதன செலவாக கணக்கீடு செய்துள்ளமையால் ஆண்டின் செயற்பாட்டு மிகை அப்பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது மீண்டுவரும் செலவு மற்றும் மூலதன செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மீண்டுவரும் செலவு மற்றும் மூலதன செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு சுற்றாடல் கணக்கை தடைசெய்கையில் கிடைத்த வட்டி மற்றும் கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 103,397 ஆன தொகை திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்குவதற்கு பதிலாக வருமானமாக கணக்கீடு செய்துள்ளமையால் ஆண்டின் செயற்பாட்டு மிகை அப்பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கை சீராக்க வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட சேதன பசளை இருப்பின் பெறுமதி ரூபா 51,000 மற்றும் பூர்த்தியாகாத இருப்புக்களை கணக்கிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2021 ஆண்டு இறுதிக் கணக்குகளில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிறுதியில் காணப்படும் பூர்த்தியான மற்றும் பூர்த்தியாகாத சேதன இருப்பை கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | சபைக்கு சொந்தமான 23 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | வருடாந்த கணிப்பீட்டில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களிற்குரிய ரூபா 95,391,801 இற்கான அட்டவணைகள் சமர்பிக்கப்படவில்லை. | நாவித முற்பணம், அட்டவணைகள் சமர்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பதிலில் குறிப்பிடுவதை போல் அட்டவணைகள் இல்லாததுடன் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள அதற்குரிய அட்டவணைகள் சமர்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | சபரகமுவ உள்ளூராட்சி புனர்நிர்மாண சுற்றறிக்கை வழிகாட்டிக் கோவையின் 01/2010 இலக்க சுற்றறிக்கையின் 7.4(iv) பந்தி | மீளாய்வாண்டில் 27 அங்கத்தவர்கள் மருத்துவமல்லாத காரணங்களிற்காக விடுமுறை பெற்று சபைக்கு சமுகமளிக்காத 70 சந்தர்ப்பங்களில் ரூபா 990,000 ஆன அங்கத்துவ படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | மதிப்பிற்குரிய அங்கத்தவர்கள் சபைக்கு சமுகமளிக்காத எல்லா சந்தப்பங்களிலும் அவ் விடுமுறைகளை சட்ட ரீதியாக அங்கீகரித்துள்ளதாகவும் இலக்கம் 1398/18 - 2005 ஜூன் 08 திகதிய வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் சேவை வழங்குனர் வருமானத்தின் கீழ் உழைக்கும் போது செலுத்தும் வரி இலக்கம் 07. | இரண்டு சேவைகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் வருமானம் ரூபா 50,000 இற்கு குறைவின் 10 சதவீதமும் ரூபா 50,000 இற்கு அதிகமாகும் எந்தவொரு பெறுமதிக்கும் 20 சதவீத உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிட வேண்டிய போதும் பிரதேச சபையில் சேவை புரியும் 11 அங்கத்தவர்களுக்கு 2018 ஏப்ரல் முதல் 2019 நவம்பர் வரை செலுத்திய படிகளிற்காக ரூபா 476,723 உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிற்குரிய அங்கத்தவர்களுக்கு எழுத்து மூலம் பதில் வழங்குமாறு அறிவித்ததாகவும் இது வரை எழுத்து மூல பதில் மதிப்பிற்குரிய அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்காததால், அவர்களின் விருப்பமின்றி சம்பளத்திலிருந்து பணம் அறவிடவில்லை எனவும், எதிர்காலத்தில் சம்பளத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 31,999,942 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 27,392,493 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய வீதவரி கட்டண நிலுவை ரூபா 3,344,300 ஆனது. இதனை துணை பதிவேடுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,285,241 குறைத்து காட்டப்பட்டிருந்தது. மேலும் 2020 ஆண்டு கிராம விரிவாக்கல் மதிப்பீட்டின் பிரகாரம் அலவ்வ பாதையை துல்ஹிரிய இடது பிரிவில் 42 வீதவரி அலகுகளிலிருந்து 10 இற்கும் 26 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக நிலுவையாக உள்ள மீதி ரூபா 71,786 உம் அதிலுள்ளது. | இந் நிலுவை தொடர்ந்து முன்வந்துள்ளதாகவும் தற்போது புதிய கணனி மென்பொருளூடாக வீதவரி அறவிடப்படுவதாகவும் இது தொடர்பாக எதிர்காலத்தில் கண்டறிந்து செயற்பட வேண்டுமெனவும் அறிவித்துள்ளதுடன் ரூபா 71,786 மீதியை அறவிட புதிய வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வீதவரி மீதிகளை அறவிடவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதற்குரிய துணை ஏடுகளுடன் இணக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 222,619 ஆனது. கணிப்பீடொன்றை மேற்கொண்டு வரி அறவிட முடியுமான காணிகளை இனங்கண்டு பதிவேட்டை திருத்தாமையால், 10 ஆண்டிற்கும் 28 ஆண்டிற்கும் இடையிலான காலம் நிலுவையாகவுள்ள ஏக்கரி வரி மீதிகள் அதனுள் காணப்பட்டன. அவ்வாறே நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீதியை துணை பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்கையில் ரூபா 50,640 வித்தியாசம் காணப்பட்டது. | ஏக்கர் வரி தொடர்பான ஒப்பாய்வை தற்போது பூர்த்தி செய்துள்ளதாகவும் அத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மீதிகளை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுத்து 2021 ஆண்டில் இது வரை ரூபா 56,780 சேர்த்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை ஏக்கர் வரி மீதிகளை அறவிடவும், பதிவேடுகளை நாளாதுவரையாக் கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய நீர் கட்டண நிலுவை ரூபா 171,419 ஆனதுடன் பதிவேடுகளை உரிய முறையில் நாளாதுவரையாக்கி சரியான | மாதாந்த பில்லிடல் மற்றும் மதிப்பிடப்பட்ட தொகைக்கு இடையிலான வித்தியாசம் தொடர்ந்தும் பதிவேடுகளில் காணப்படுவதாகவும் பதிவேடுகளை | நிலுவை மீதிகளை அறவிடவும், பதிவேடுகளை உரிய முறையில் |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளை இனங்கண்டிருக்கவில்லை. | பரிசோதித்து பதிவழிக்க நடவடிக்கை எடுத்து விரையில் சீராக்கிக் கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நாளாதுவரையாக் கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய நானாவித கடை வாடகை நிலுவை ரூபா 469,910 ஆனதுடன் பதிவேடுகளை உரிய முறையில் நாளாதுவரையாக்கி சரியான மீதிகளை மற்றும் காலங்களை இனங்கண்டிருக்கவில்லை. | மீதிகளில் வித்தியாசம் ஒன்று காணப்படுவதாகவும் வித்தியாசத்தை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகையை அறவிடவும் காலப் பகுப்பாய்வை நாளாதுவரையாக் கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வியாபார அனுமதிப்பத்திரம் | | |
| | சபைக்கு சொந்தமான 56 வியாபார நிறுவனங்களிற்காக வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்காதமையால் ரூபா 56,000 ஆன மதிப்பிடப்பட்ட வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக் கொள்வதாகவும் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாவண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய கடன்படுனர் மீதிகளின் பெறுமதி ரூபா 11,271,282 ஆனது. இம் மீதிகளை அறவிட மேற்கொண்ட நடவடிக்கைகள் அவதானிக்கப்படவில்லை. | கிடைக்க வேண்டிய மீதிகளை சரி செய்து சரியாக கால பகுப்பாய்வை முன்வைக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கிடைக்க வேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தொகை ரூபா 3,178,871 ஆன 07 கணக்கு மீதிகள் நீண்ட காலமாக செயற்படாது காணப்படுவதுடன் அது தொடர்பில் பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவக்கை எடுத்திருக்கவில்லை. | கண்டறிந்து பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்படாத காணக்குகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

**3.2 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | புதிய அலுவலக கட்டிடத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்கையில் 2019 மார்ச் 14 இன் 2/2019 இலக்க மாகாண திரைசேறி சுற்றறிக்கைக்கு மாற்றமாக பதிவு செய்யப்பட்ட வழங்குனர் நிறுவனங்களிற்கு வெளியில் வெளி நிறுவனமொன்றிலிருந்து ரூபா 1,937,360 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பெறுகைகள் வழிகாடடிக் கோவையின் 5.6 பிரகாரம் விலைமணு கோருகையில் குறித்த பொருட்களின் அளவுத் திட்டங்கள் குறிப்பிடப்படாமை தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை கிடைக்க முன்னர் பெறுகைகள் குழு அறிக்கை பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | பழைய கட்டிட கூறை பழுதடைந்தமையால் நிலவிய மழையிலான காலநிலையின் மீது புதிய அலுவலகத்திற்கு செல்ல வேண்டிய தேவைப்பாட்டின் காரணமாக பிரதேச வாரியான விலை மணு கோரும் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொண்டதாகவும் இதற்கு முன்னர் அளவுத் திட்டம் அழைப்பிக்கவில்லை எனவும் எதிர்வரும் கொள்வனவுகளிற்கு வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்கையில் பெறுகைகள் விழிகாட்டிக் கோவையிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | புதிய கட்டிடத்தில் சுவர் கபட்களை பொருத்த உத்தேச திட்டம் மற்றும் அளவுத் திட்டமின்றி விலை மணு கோரியிருந்ததுடன், கேள்வி மணு சமர்பிக்க வேண்டிய இறுதித் திகதி 2019 திசெம்பர் 17 ஆன போதும் அத்திகதிக்கு பின்னர் கேள்வி மணு சமர்பித்த 02 நிறுவனங்களின் கேள்வி மணுக்கள் மேலே இறுதித் திகதி கிடைத்தாக கருதி தின முத்திரை இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகைகள் குழு தமக்கு கிடைக்காத 02 கேள்வி மணுக்களை அடிப்படையாகக் கொண்டு வழங்குனரை தெரிவு செய்து ரூபா 1,850,000 செலுத்தியதில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நோக்கம் மற்றும் ஏற்பாடுகளிற்கு மாற்றமாக நடவடிக்கை எடுத்திருந்தது. | நிலவிய சீரற்ற காலநிலையின் முன் புதிய பிரதேச சபை அலுவலக கட்டிடத்திற்கு பிரவேசித்தல் மற்றும் அலுவலக கோவைகளின் பாதுகாப்பிற்காக செயற்பட நேர்ந்ததால் துரிதமான மேற்கொண்ட செயற்பாடாகையால் சுட்டிக் காட்டிய குறைகளை ஏற்றுக் கொள்வதாகவும் எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்குமாறு விடய பொறுப்பு அலுவலரிற்கு ஆலோசனை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கொள்வனவுகள் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நோக்கம் ஏற்பாடுகள் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | புதிய சபை அலுவலக கட்டிட முன்பக்கமாக நுலைவாயிலிற்கு அருகில் பக்க மதிலிற்காக திரை கவசமொன்றை பெற்றுக் கொள்ளும் தேவையிற்குரிய கோரிக்கை 2020 ஜுன் 13 திகதி கிடைத்திருந்ததுடன் அதற்காக விலை மணு கோரல், கோரிக்கையிற்கு முன்னர் அதாவது 2020 மே 29 திகதி | அலுவலர்களின் தேவைகள் நிறைவேறும் வரை அவ்வப்போது ஒவ்வொறு பிரிவினதும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் சுட்டிக்காட்டிய கோரிக்கைகளக்கு முன்னர் பொது சபையின் அங்கீகாரத்தின் கீழ் | கொள்வனவுகள் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் இதற்கான அங்கீகாரம் 2020 ஜுன் 15 திகதி கிடைத்திருந்ததுடன் 2020 ஜுன் 16 திகதி கேள்வி மனு திறக்கப்பட்டு அத்திகதியே பெறுகைகள் குழுவின் பரிந்துரையை பெற்றுள்ளதில் இச் செயற்பாடு வெளிப்படை தன்மையற்றதாக மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக 2020 ஆகஸ்ட் 13 திகதி ரூபா 250,800 செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கொண்ட நடவடிக்கை என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | வரகாபொல சந்தை வளவில் கடையறைகளை நிர்மாணிக்கும் போது கட்டிட திட்டம் அங்கீகரிக்க முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளமை, II கட்ட மதிப்பீடு சபையில் அங்கீகரிக்கப்பட முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளமை, பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3 பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமை, வழிகாட்டிக் கோவையின் 3.9.4 மற்றும் நிதி ஆணைக்குழுவின் FC/3/3/2013 மற்றும் 2013 ஜுலை 26 திகதிய சுற்றறிக்கையிற்கு முரனாக கூட்டு பெறுமதி ரூபா 3,867,196 இற்காக தனித் தனியாக 02 மதிப்பீடு தயாரித்து ஒரே நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்கியுள்ள காரணத்தால் பெறுனர் கையேட்டின் 3.8 பிரிவிற்கு இணங்காமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | தொழிநுட்ப அலுவலரின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும், ஆண்டு முழுவதும் வருமானம் கிடைப்பதற்கு எற்ப மதிப்பீடு தயாரித்து வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |